## நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம். எஸ்.டி.சி. 923/2021

2023 ம் ஆண்டு ஜுன் மாதம் 12 ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 2 வது நபாின் வாக்குமுலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மேகலா | வயது | 23 |
| த.பெ.(அ)க.பெ. | முருகேசன் | தொழில் | செவிலியர் |
| ஊர்/பணிபுரியுமிடம் | குருவாணிகுண்டா | சமயம் | இந்தியன் |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை :எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை.

(1) நான் குருவாணிகுண்டா கிராமத்தில் வசிக்கிறேன். நான் நாட்றம்பள்ளியில் உள்ள தனியார் மருத்துவமனையில் செவிலியராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ரகுபதியை தெரியும். 07.06.2019 அன்று எனது கணவர் பொற்செல்வன் சாலை விபத்தில் இறந்துவிட்டார். அதன்பிறகு நான் எனது கணவர் வீட்டில் குழந்தையுடன் இருந்த போது அங்கே எனது கணவரது குடும்பத்தார் அடிக்கடி பிரச்சனை செய்து வந்தார்கள். எனவே நான் எனது அம்மா வீட்டிற்கு வந்து விட்டேன். ஊரில் இருந்தவர்கள் எனது கணவர் வீட்டிற்கு சென்று பஞ்சாயத்து பேசி எனது நகைகளை வாங்கி கொண்டு என்னை எனது அம்மா வீட்டிற்கே நிரந்தரமாக குழந்தையுடன் அழைத்து சென்றுவிடலாம் என்று முடிவு செய்தார்கள். அதன்படி கடந்த 09.10.2019 அன்று காலை அ.சா. 1 ரகுபதி தனது மாருதி காரில் அவர் ஓட்ட நான் மற்றும் என்னுடன் எனது அம்மா மற்றும் உறவினர்கள் வந்தோம்.

(2) அன்றைய தினம் காலை நாங்கள் காரில் நாட்றம்பள்ளியிலிருந்து கிளம்பி அவ்வாறு வந்து கொண்டிருந்த போது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.கே.ராஜா அவர்கள் வீட்டிற்கு முன்பாக எங்கள் காருக்கு பின்னால் வந்து கொண்டிருந்த பேருந்து ஒன்று நான் பயணம் செய்த காரின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. விபத்து ஏற்பட்டவுடன் கார் சாலையில் கவிழ்ந்துவிட்டது. மேலும் சாலையிலிருந்து கீழே உருண்டுவிட்டது. எனவே என்னால் பேருந்து ஓட்டி வந்த நபரை பார்க்க இயலவில்லை. அந்த விபத்தில் எனக்கும், அ.சா.1 ரகுபதி மற்றும் என்னுடன் வந்த ஞானசேகர், மஞ்சுளா, எனது அம்மா புஷ்பா, சின்னண்ணன், எனது குழந்தை சேஷாசந்த் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டது.

திருப்பத்துார் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக வந்து சேர்ந்தோம். எனது அம்மா புஷ்பாவிற்கு மேல் சிகிச்சை தேவைப்பட்டதால் அவரை தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். வழக்கு சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=

நான் என் தாயார் வீட்டிலிருந்து டி.கே. ராஜா வீட்டிற்கு பஞ்சாயத்து பேசுவதற்காக சென்றோம் என்றால் சரிதான். நாங்கள் சென்ற சாலையில் வலதுபுற சாலையில் டி.கே.ராஜா வீடு இருந்தது என்றால் சரிதான். அப்படி வலதுபுறம் இருந்த டி.கே.ராஜா வீட்டிற்கு செல்வதற்காக நாங்கள் சென்ற வாகனத்தின் ஓட்டுநர் வலதுபுறம் எங்கள் வண்டியை வளைத்தார் என்றால் சரிதான். அப்படி வளைக்கும்போது ஒரு மோதல் சத்தம் கேட்டது என்றால் சரிதான். அப்போது நாங்கள் வந்த வண்டி சாலையில் கவிழ்ந்துவிட்டது என்றால் சரிதான். விழுந்த எங்களை அக்கம் பக்கம் வந்த நபர்கள் ஆம்புலன்ஸில் ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். இந்த விவரம் மட்டும்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். திடிரென்று சாலையின் வலதுபுறம் எங்களது ஓட்டுநர் திரும்பியதால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.

மறுவிசாரணை= இல்லை

## <u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>
## <u>எஸ்.டி.சி. 923/2021</u>

2023 ம் ஆண்டு ஜுன் மாதம் 12 ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 3 வது நபாின் வாக்குமுலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மஞ்சுளா | வயது | 43 |
| த.பெ.(அ)க.பெ. | சின்னதம்பி | தொழில் | இல்லத்தரசி |
| ஊர்/பணிபுரியுமிடம் | மல்லகுண்டா | சமயம் | இந்தியன் |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u>எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை.

(1) நான் மல்லகுண்டா கிராமத்தில் வசிக்கிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். அ.சா.2 மேகலா எனது அக்கா மகள். அ.சா.1 ரகுபதியை தெரியும். கடந்த 07.06.2019 அன்று அ.சா.2-ன் கணவர் பொற்செல்வன் சாலை விபத்தில் இறந்துவிட்டார். அதன்பிறகு அ.சா.2 அவரது கணவர் வீட்டில் குழந்தையுடன் இருந்த போது அங்கே அ.சா.2 கணவரது குடும்பத்தார் அடிக்கடி பிரச்சனை செய்து வந்தார்கள். எனவே அவர் தனது அம்மா வீட்டிற்கு வந்து விட்டார். ஊரில் இருந்தவர்கள் அவரது கணவர் வீட்டிற்கு சென்று பஞ்சாயத்து பேசி அவரது நகைகளை வாங்கி கொண்டு அ.சா.2 ன் அம்மா வீட்டிற்கே நிரந்தரமாக குழந்தையுடன் அழைத்து வந்துவிடலாம் என்று முடிவு செய்தார்கள். அதன்படி கடந்த 09.10.2019 அன்று காலை அ.சா. 1 ரகுபதி தனது மாருதி காரில் அவர் ஓட்ட நான் மற்றும் என்னுடன் அ.சா.2, அவரது அம்மா மற்றும் உறவினர்கள் வந்தோம்.

(2) அன்றைய தினம் காலை நாங்கள் காரில் குருபானிக்குண்டா கிராமத்திலிருந்து கிளம்பி அவ்வாறு வந்து கொண்டிருந்த போது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.கே.ராஜா அவர்கள் வீட்டிற்கு முன்பாக எங்கள் காருக்கு பின்னால் வந்து கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்று நான் பயணம் செய்த காரின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. விபத்து ஏற்பட்டவுடன் கார் சாலையில் கவிழ்ந்துவிட்டது. மேலும் சாலையிலிருந்து கீழே உருண்டுவிட்டது. எனவே என்னால் பேருந்து ஓட்டி வந்த நபரை பார்க்க இயலவில்லை. அந்த விபத்தில் எனக்கும், அ.சா.1 ரகுபதி, அ.சா.2 மேகலா மற்றும் என்னுடன் வந்த ஞானசேகர், மஞ்சுளா, அ.சா.2 ன் அம்மா புஷ்பா, சின்னண்ணன், அ.சா.2 ன்

குழந்தை சேஷாசந்த் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டது. திருப்பத்துார் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக வந்து சேர்ந்தோம். எனது அக்கா புஷ்பாவிற்கு மேல் சிகிச்சை தேவைப்பட்டதால் அவரை தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். வழக்கு சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

தருமபுரி ரோட்டில் டி.கே ராஜா வீட்டு அருகே எங்கள் வாகனம் சென்றது என்றால் சரிதான். நாங்கள் சென்ற சாலையில் வலதுபுற சாலையில் டி.கே.ராஜா வீடு இருந்தது என்றால் சரிதான். அப்படி வலதுபுறம் இருந்த டி.கே.ராஜா வீட்டிற்கு செல்வதற்காக நாங்கள் சென்ற வாகனத்தின் ஓட்டுநர் வலதுபுறம் எங்கள் வண்டியை வளைத்தார் என்றால் சரிதான். அப்படி வளைக்கும்போது ஒரு மோதல் சத்தம் கேட்டது என்றால் சரிதான். அப்போது நாங்கள் வந்த வண்டி சாலையில் கவிழ்ந்துவிட்டது என்றால் சரிதான். விழுந்த எங்களை அக்கம் பக்கம் வந்த நபர்கள் ஆம்புலன்ஸில் ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். இந்த விவரம் மட்டும்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். திடீரென்று சாலையின் வலதுபுறம் எங்களது ஓட்டுநர் திரும்பியதால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.

மறுவிசாரணை= இல்லை

## நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.
## எஸ்.டி.சி. 923/2021

2023 ம் ஆண்டு ஜூன் மாதம் 12 ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 4 வது நபரின் வாக்குமுலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | புஷ்பா | வயது | 47 |
| த.பெ.(அ)க.பெ. | முருகேசன் | தொழில் | விவசாயம் |
| ஊர்/பணிபுரியுமிடம் | குருவாணிகுண்டா | சமயம் | இந்தியன் |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u>எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை.

(1) நான் குருவாணிகுண்டா கிராமத்தில் வசிக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.2 மேகலா எனது மகள். அ.சா.1 ரகுபதியை தெரியும். கடந்த 07.06.2019 அன்று அ.சா.2-ன் கணவர் பொற்செல்வன் சாலை விபத்தில் இறந்துவிட்டார். அதன்பிறகு அ.சா.2 அவரது கணவர் வீட்டில் குழந்தையுடன் இருந்த போது அங்கே அ.சா.2 கணவரது குடும்பத்தார் அடிக்கடி பிரச்சனை செய்து வந்தார்கள். எனவே அவர் எங்கள் வீட்டிற்கு வந்து விட்டார். ஊரில் இருந்தவர்கள் அவரது கணவர் வீட்டிற்கு சென்று பஞ்சாயத்து பேசி அவரது நகைகளை வாங்கி கொண்டு அ.சா.2 ன் எங்கள் வீட்டிற்கே நிரந்தரமாக குழந்தையுடன் அழைத்து வந்துவிடலாம் என்று முடிவு செய்தோம். அதன்படி கடந்த 09.10.2019 அன்று காலை அ.சா. 1 ரகுபதி தனது மாருதி காரில் அவர் ஓட்ட நான் மற்றும் என்னுடன் அ.சா.2,அ.சா.3 எனது தங்கை மற்றும் உறவினர்கள் வந்தோம்.

(2) அன்றைய தினம் காலை நாங்கள் காரில் குருபானிக்குண்டா கிராமத்திலிருந்து கிளம்பி அவ்வாறு வந்து கொண்டிருந்த போது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.கே.ராஜா அவர்கள் வீட்டிற்கு முன்பாக எங்கள் காருக்கு பின்னால் வந்து கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்று நான் பயணம் செய்த காரின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. விபத்து ஏற்பட்டவுடன் கார் சாலையில் கவிழ்ந்துவிட்டது. மேலும் சாலையிலிருந்து கீழே உருண்டுவிட்டது. எனவே என்னால் பேருந்து ஓட்டி வந்த நபரை பார்க்க இயலவில்லை. அந்த விபத்தில் எனக்கும், அ.சா.1 ரகுபதி, அ.சா.2 மேகலா மற்றும் என்னுடன் வந்த ஞானசேகர், மஞ்சுளா, அ.சா.3 ன் எனது தங்கை , சின்னண்ணன், அ.சா.2 ன்

குழந்தை சேஷாசந்த் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டது. திருப்பத்துார் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக வந்து சேர்ந்தோம். எனக்கு மேல் சிகிச்சை தேவைப்பட்டதால் என்னை தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். வழக்கு சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

தருமபுரி ரோட்டில் டி.கே ராஜா வீட்டு அருகே எங்கள் வாகனம் சென்றது என்றால் சரிதான். நாங்கள் சென்ற சாலையில் வலதுபுற சாலையில் டி.கே.ராஜா வீடு இருந்தது என்றால் சரிதான். அப்படி வலதுபுறம் இருந்த டி.கே.ராஜா வீட்டிற்கு செல்வதற்காக நாங்கள் சென்ற வாகனத்தின் ஓட்டுநர் வலதுபுறம் எங்கள் வண்டியை வளைத்தார் என்றால் சரிதான். அப்படி வளைக்கும்போது ஒரு மோதல் சத்தம் கேட்டது என்றால் சரிதான். அப்போது நாங்கள் வந்த வண்டி சாலையில் கவிழ்ந்துவிட்டது என்றால் சரிதான். விழுந்த எங்களை அக்கம் பக்கம் வந்த நபர்கள் ஆம்புலன்ஸில் ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். இந்த விவரம் மட்டும்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். திடிரென்று சாலையின் வலதுபுறம் எங்களது ஓட்டுநர் திரும்பியதால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.

மறுவிசாரணை= இல்லை